## ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය

# විභාග අපේක්ෂකයන් සඳහා නීති/ උපදෙස්

01. සියලුම විභාග අපේක්ෂකයන් විභාග ශාලාව තුලදීත් විභාග පරිශ්‍රය තුලදීත් විභාග ශාලාධිපතිට ද ඔහුගේ කාර්යය මණ්ඩලයට ද අනෙක් විභාග අපේක්ෂකයන්ට ද බාධාවක් හෝ අවහිරයක් ඇති නොවන ලෙස විනිතව හැසිරිය යුතුය. විභාග ශාලාවට ඇතුලු වන විටත්, ඉන් පිටවන විටත් ඉතා සන්සුන් ලීලාවෙන් හැසිරිය යුතුය. එසේම විභාග අපේක්ෂකයින් විභාග පරිශ්‍රයේ දේපලවලට හෝ විභාග කාර්යය මණ්ඩලයේ පෞද්ගලික දේපලනලට කිසිඳු අන්දමකින් හෝ අලාභ හානි නොකළ යුතුය.

02. විභාග අපේක්ෂකයන් විභාග ශාලාධිපතිගේ අධිකාරියට යටත් වන බැවින්, ඔවුන් විභාගය පවත්වාගෙන යන කාලසීමාව තුළත්, විභාගය පටන් ගැනීමට පෙරත්, විභාගය අවසන් වූ විගසත් විභාග ශාලාධිපතිගේ හා ඔහුගේ කාර්යය මණ්ඩලයේ උපදෙස් අනුව ක්‍රියා කළ යුතුය.

03. විභාග ප්‍රශ්න පත්‍රයකට පිළිතුරු සැපයීම ආරම්භ කොට පැය භාගයක් ගත වූවාට පසු කිසිඳු හේතුවක් නිසා විභාග අපේක්ෂකයෙකුට විභාග ශාලාවෙන් පිට වී යාමට අවසර නැත.

04. සෑම විටම විභාග අපේක්ෂකයෙකු තමාට නියමිත විභාග මධ්‍යස්ථානයේ දී විභාගයට පෙනී සිටිය යුතුය. සෑම විභාග අපේක්ෂතයෙතුම තමාගේ විභාග අංකය දරන ආසනයේ හැර වෙන කිසිම ආසනයක වාඩි නොවිය යුතුය. විභාග ශාලාධිපතිගේ විශේෂ අවසරය නොමැතිව තමාගේ ආසනය වෙනස් නොකල යුතුය. තමන්ට නියම නොකරන ලද විභාග මධ්‍යස්ථානයක දී විභාගයකට පෙනී සිටීම, නියම කරන ලද මධ්‍යස්ථානයක නියම නොකරන ලද අසුනක අසුන් ගැනීම වංචනික අදහසින් කරන ලද ක්‍රියාවක් වශයෙන් සලකනු ලැබේ.

05. විභාග ශාලාව තුළ සම්පූර්ණයෙන් ම නිශ්ශබ්ද ව සිටිය යුතුය. මොනම කාරණයක් නිසාවත් විභාග ශාලාව ඇතුලත දී විභාග කාර්යය මණ්ඩලයේ කෙනෙකු සමඟ හැර, විභාග ශාලාව ඇතුලත හෝ ඉන් පිටත හෝ සිටින කිසිවකු සමඟ කථා කිරීම හෝ පණිවිඩ හුවමාරු කර ගැනීම හෝ වෙනත් අන්දමකින් ගනුදෙනු කිරීම අවශ්‍ය වුවහොත් ප්‍රථමයෙන් ඒ සඳහා විභාග ශාලාධිපතිගේ අවසරය ලබා ගත යුතුය.

06. විභාග අපේක්ෂකයන් විභාග මධ්‍යස්ථානයේ දී තම අනන්‍යතාවය තහවුරු කල යුතුය. ඒ සඳහා උපදෙස් දී ඇති පරිදි පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුවේ ජාතික හැඳුනුම්පත හෝ වලංගු විදේශ ගමන් බලපත්‍රය හෝ වලංගු රියදුරු බලපත්‍රය හෝ පමණක් වලංගු වේ. මෙම හැඳුනුම්පත්‍ර ඉදිරිපත් කිරීමට අපොහොසත් අපේක්ෂකයින්ගේ අපේක්ෂකත්වය පිළිබඳ ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනයේ අධ්‍යක්ෂ ජනරාල් විසින් තීරණය කරනු ඇත.

07. විභාග අපේක්ෂකයන් ප්‍රවේශපත්‍රයෙහි තම අත්සන සඳහා සුදුසුකම් ඇති පුද්ගලයෙකු ලවා සහතික කර ඉදිරිපත් කල යුතුය. එසේ අත්සන සහතික නොකරන ලද ප්‍රවේශපත්‍ර ඉදිරිපත් කරන අපේත්ෂකයන්ගේ අපේක්ෂකත්වය සම්බන්ධයෙන් ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනයේ අධ්‍යක්ෂ ජනරාල් විසින් තීරණ කරනු ඇත.

08. විභාග ශාලාධිපති නියම කලහොත් තමන් සන්තකව තිබෙන දෑ පරික්ෂාව සඳහා ඉදිරිපත් කිරීමට හා සහතික කිරීමට සෑම විභාග අපේක්ෂකයෙකුම බැඳී සිටී.

09. විභාගයේ දී උත්තර ලිවීම සඳහා තමන්ට සපයනු ලබන කඩදාසි හෝ වෙනත් ද්‍රව්‍ය විභාග ශාලාවෙන් පිටතට ගෙනයාම තහනම්ය.

10. ඉහත නීති උපදෙස් උල්ලංඝනය කරන විභාග අයදුම්කරුවන්ට අදාලව සුදුසු පරිදි අවසන් තීරණ ගැනීම ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනයේ අධ්‍යක්ෂ ජනරාල් විසින් සිදු කරනු ඇත.

අධ්‍යක්ෂ ජනරාල්<br>
ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

## பரீட்சார்த்திகளுக்கான சட்ட அறிவுறுத்தல்கள்

1. அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்திற்குள்ளோ அல்லது பரீட்சை மண்டபம் அமைந்துள்ள வளாகத்தினுள்ளோ மண்டப மேற்பார்வையாளர், அவரது பணிக்குழாத்தினர் மற்றும் ஏனைய பரீட்சார்த்திகளுக்கு எவ்வித குழப்பமோ, இடையூறோ விளைவிக்காத வகையில் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறே பரீட்சை மண்டபத்தினுள் நுழையும்போதும், வெளியேறும் போதும் அமைதியைக் கடைப்பிடித்தல் வேண்டும். மேலும், பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்திலுள்ள சொத்துக்களுக்கோ அல்லது பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட உடமைகளுக்கு எவ்வித ஊறும் விளைவித்தல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகையால் பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னரும், பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலும் மற்றும் பரீட்சை முடிவடையும் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர், அவரது பணிக் குழாத்தினரால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களின்படி செயற்படுதல் வேண்டும்.

3. பரீட்சை வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க ஆரம்பித்ததும் பரீட்சை முடிவடையும் வரை எவ்வித காரணத்திற்காகவும் பரீட்சை மண்டபத்தினை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்படமாட்டாது.

4. பரீட்சார்த்தியொருவர் தனக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எந்தவொரு பரீட்சார்த்தியும் தனக்குரிய பரீட்சைச் சுட்டெண்ணிடப்பட்ட இருக்கையைத்தவிர வேறெந்த இருக்கையிலும் அமரக்கூடாது. பரீட்சை மண்டப மேற்பார்வையாளரது விசேட அனுமதியின்றி பரீட்சார்த்தி எவரும் தனது இடத்தினை மாற்றக்கூடாது. தனக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் தனக்குரிய இருக்கையை விடுத்து பிறிதொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவது மோசடியான உள்நோக்கத்துடன் செய்யப்படும் செயலாகவே கருதப்படும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதியைப் பேணுதல் அவசியம். எக்காரணத்திற்காகவும் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளேயோ அன்றி வெளியேயோ உள்ள யாருடனும் பேசுவதற்கோ, செய்தியைப் பரிமாற்றிக் கொள்ளவோ அல்லது வேறு ஏதாவது அவசியம் ஏற்படின் பரீட்சைக் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரை நாடுவதுடன், மண்டப மேற்பார்வையாளரின் முன்னனுமதியைப் பெறுதல் வேண்டும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவது அவசியம். அதற்காக அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டதன்படி ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுள் ஒன்றைச் சமர்ப்பிக்கமுடியும். அவ்வாறு ஆளடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறும் பரீட்சார்த்தியொருவரது மனுத்தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமே இறுதி முடிவினை எடுப்பார்.

7. பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தினை தகுதிவாய்ந்த நபரொருவர் மூலம் சான்றுப்படுத்தியிருத்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பம் சான்றுப்படுத்தப்படாத பரீட்சை அனுமதிப்பத்திரம் தொடர்பான மனுவின் இறுதி முடிவை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமே எடுப்பார்.

8. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெறும் காலப்பகுதியினுள் புத்தகங்கள் / பொருட்கள் / தொலைபேசி உள்ளிட்ட எவ்வித இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு சாதனங்களையும் தம்வசம் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சைக் கடமையிலுள்ள உத்தியோகத்தர், யாரேனும் பரீட்சார்த்தியொவர் வசமுள்ள பொருட்களை பரிசோதனைக்கு முன்வைக்குமாறு உத்தரவிடின் அதற்கேற்ப மண்டபத்திலுள்ள அனைத்துப் பரீட்சார்த்திகளும் செயலாற்றக் கடமைப்பட்டுள்ளனர்.

9. பரீட்சையின்போது விடை எழுதுவதற்காக வழங்கப்படும் தாள்கள் அல்லது அத்தகைய பிறபொருட்களை பரீட்சை மண்டபத்தினைவிட்டு வெளியே எடுத்துச்செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

10. மேற்படி அறிவுறுத்தல்களை மீறும் அபேட்சகர்கள் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமே தகுந்த இறுதி முடிவுகளை எடுப்பார்.

பணிப்பாளர் நாயகம்
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்